செய்தி வெளியீடு எண்–777 நாள்– 02.12.2007

# ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்ட 975 கல்லூரி ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணைகள்

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், தமிழகம் முழுவதும் காலியாகவுள்ள அரசுப் பணியிடங்களில் 3 இலட்சம் இளைஞர்களுக்கு உடனடி வேலைவாய்ப்புகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, 13.5.2006 அன்று இந்த அரசு அமைந்ததைத் தொடர்ந்து, தமிழக அரசின் பல்வேறு துறைகளிலும் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்புவதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை இரண்டு இலட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் புதிதாக நிரந்தர வேலைவாய்ப்புகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர். அதுபோலவே, உயர் கல்வித் துறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பல ஆண்டுகளாகக் காலியாக இருந்த 1,020 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, உயர்கல்வித் தகுதி, பணி அனுபவம், படைப்புத் திறன் முதலிய பல்வேறு தகுதிகளின் அடிப்படையில், 34 வகைப் பாடப்பிரிவுகளில் 975 இளைஞர்கள் முறையாகத் தேர்வு செய்யப்பட்டு, கடந்த 19.11.2007 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களை அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக நியமனம் செய்வதற்கு அடையாளமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30 இளைஞர்களுக்குப் பணிநியமன ஆணைகளை இன்று (2.12.2007) வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

பணிநியமன ஆணைகளைப் பெற்ற விரிவுரையாளர்கள் பல ஆண்டுகளாகக் காத்திருந்தும் கிடைக்காத அரிய வாய்ப்பு தங்களுக்குத் தற்போது கிடைத்துள்ளது என்றும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் நியமன ஆணைகள் பெற்றமை தங்கள் வாழ்வில் மறக்கவியலா இனிய நிகழ்வாகுமென்றும்கூறி, மகிழ்ச்சியுடனும், பெருமிதத்துடனும் தங்கள் நன்றியுணர்வை வெளிப்படுத்தினர்.

கல்லூரி ஆசிரியர்கள் தேர்வு நியாயமாகவும், நேர்மையாகவும், நடைபெற்று நியமன ஆணைகள் உடனடியாக வழங்கப்பட்டுள்ளமைக்காகத் தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் முனைவர் கே.ஜி.பழனி தமிழக அரசுக்குப் பாராட்டு தெரிவித்து, முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, உயர்கல்வித் துறைச் செயலாளர் திரு. கே. கணேசன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் முனைவர் பி.ஏ. இராமையா, உறுப்பினர் செயலர் திரு. இரா. கண்ணன், கல்லூரிக் கல்வி இயக்குநர், திருமதி நளினி ரவீந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.

*****